கோ.3

செயற்பொறியாளர்,பொ.ப.து/நீ.ஆ.து,அலுவலகம், திட்டங்கள் திட்டமிடுதல் & வடிவமைப்பு கோட்டம், திருநெல்வேலி -11.

பிறப்பிப்பவர்: திருமதி.த.பத்மா, பி.இ,
செயற்பொறியாளர், பொ.ப.து/நீ.ஆ.து
திருவள்ளுவர் ஆண்டு 2052 / தை

செ.மு.க.எண். பஉ /பு.ஆ /2021 / நாள்: 16 . 02.2021

**பொருள்** பணியமைப்பு - பொபது - த.நா.அ.ப.தொகுதி – திரு.பெ.விஜய் இளநிலை உதவியாளருக்கு - இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை பிறப்பித்தல் சார்பு.

**பார்வை:** 1.முதன்மை தலைமைப் பொறியாளர்,நீ.ஆ.து., மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை அவர்களின் செ.மு.ஆ.எண்.3(3)/35935/2020 /நாள்.17.09.2020.
2..இவ்வலுவலக செ.மு.க.எண். பஉ/822/2020/ நாள் 22.09.2020.

-----------------

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆணடிற்கான போட்டித் தேர்வின் மூலமாக இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பார்வை (1)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி இக்கோட்ட கட்டுப்பாட்டின் கீழுள்ள திட்டங்கள் திட்டமிடுதல் மற்றும் வடிவமைப்பு உபகோட்டம் எண்: 2 திருநெல்வேலி அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியமர்வாணை வழங்கப்பட்ட திரு.பெ.விஜய் அவ்வலுவலகத்தில் காலியாக இருந்த இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 23.09.2020 முற்பகல் பணியேற்று தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் எண் 14/2016) -ன் பிரிவு 28-ன்படி இவரது பணி இளநிலை உதவியாளர் பதவியில் இவர் பணியேற்ற நாளான 23.09.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது. இதனை தொடர்ந்து இளநிலை உதவியாளர் பதவியில் 23.09.2020 மு.ப முதல் தகுதிகாண் பருவம் துவக்கப்படுகிறது. இவர் இளநிலை உதவியாளர் பதவியில் தமது மூன்றாண்டு கால தொடர்பணியில் இரண்டாண்டு கால பணியினை நிறைவு செய்திட வேண்டும், மேலும் இந்த தகுதிகாண் பருவ காலத்தில் இவர் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்பெறும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

மேலும் இந்த பணி வரன்முறையானது சென்னை, உயர்நீதிமன்றம் சென்னை கிளை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நியமனம் தொடர்பாக தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளில் நீதிமன்றம் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் மேற்கண்ட பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

ஒம்/- பொறி. த. பத்மா, பி.இ.,
செயற்பொறியாளர்,பொ.ப.து/நீ.ஆ.து.,
திட்டங்கள் திட்டமிடுதல் & வடிவமைப்புகோட்டம்,
திருநெல்வேலி - 11.

**பெறுநர்**

திரு.பெ.விஜய்
இளநிலை உதவியாளர்,
வழி: உதவிசெயற்பொறியாளர், திட்டங்கள் திட்டமிடுதல் மற்றும் வடிவமைப்பு உபகோட்டம் எண் -2, திருநெல்வேலி.
நகல்: உதவிசெயற்பொறியாளர், திட்டங்கள் திட்டமிடுதல் மற்றும் வடிவமைப்பு உபகோட்டம் எண் -2, திருநெல்வேலி.

செயற்பொறியாளர்,பொ.ப.து/நீ.ஆ.து.,
திட்டங்கள் திட்டமிடுதல் & வடிவமைப்புகோட்டம்,
திருநெல்வேலி - 11.
16.02.2021

E:AB/EC-2020 Letter